நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2018

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

தரம் : ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3, 4)

**Level : Basic (Year 3 & 4)**

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

Time Given : 60 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

ஆசிரியர் முதல் 10 நிமிடங்களுக்குள் எல்லா வினாக்களையும் வாசித்துக் காட்டல் வேண்டும்.

**June 2018**

**For questions 1 to 4, choose the word that best describe the action shown in the picture.**

**1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.**

1. .................................. வேகமாக ஓடுகிறது.

(a) குதிரை

(b) கரடி

(c) சிங்கம்

(d) பசு



2. கண்ணன் புத்தகம் ..................................

(a) ஓடுகின்றான்

(b) படிக்கின்றான்

(c) இருக்கின்றான்

(d) குடிக்கின்றான்



3. கலா .................................. வாசிக்கின்றாள்.

(a) புல்லாங்குழல்

(b) மேளம்

(c) வயலின்

(d) வீணை



4. தோட்டத்தில் பல நிற .................................. இருக்கின்றன.



(a) வண்டுகள்

(b) பறவைகள்

(c) மரங்கள்

(d) பூக்கள்

**Read and understand the given poem and answer the questions 5 to 9.**

**கீழே தரப்பட்ட பாடலை வாசித்து அதிலிருந்து 5 முதல் 9 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

தோசையம்மா தோசை
அம்மா சுட்ட தோசை
அரிசி மாவும் உளுந்து மாவும்
கலந்து சுட்ட தோசை
அப்பாவுக்கு நான்கு
அம்மாவுக்கு மூன்று
அண்ணாவுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று
தின்ன தின்ன ஆசை.



5. இப்பாடலில் சொல்லப்பட்ட உணவு எது?

(a) இட்டலி (b) பிட்டு
(c) தோசை (d) அப்பம்

6. யார் தோசை சுட்டார்?

(a) அப்பா (b) அம்மா
(c) அக்கா (d) அண்ணா

7. அண்ணாவுக்கு எத்தனை தோசை?

(a) இரண்டு (b) ஒன்று
(c) எட்டு (d) ஆறு

8. இந்த பாட்டில் தோசை மா(மாவு) எதனால் ஆனது?

(a) கோதுமை மா (b) ரவா (ரவை)
c) கடலை மா (d) அரிசி மாவும் உளுந்து மாவும்

9. படத்தில் தோசை என்ன வடிவமுள்ளது?

(a) வட்டம் (b) சதுரம்
(c) நீள் சதுரம் (d) முக்கோணம்

**For questions 10 to 12, choose the word that has the closest meaning to the underlined word.**

**10 முதல் 12 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

10. என் <u>வீடு</u> மிக அழகானது.

(a) இல்லம் (b) கோவில்

(c) பூங்கா (d) தெரு

11. நான் மூன்றாம் <u>ஆண்டு</u> படிக்கிறேன்.

(a) கிழமை (b) வருடம்

(c) நாள் (d) மாதம்

12. எல்லோரும் இங்கே <u>உட்காருங்கள்.</u>

(a) பாருங்கள் (b) வாசியுங்கள்

(c) நில்லுங்கள் (d) இருங்கள்

**For questions 13 to 15, choose the opposite word to the underlined word in the sentence.**

**13 முதல் 15 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு எதிர் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

13. கண்ணன் ஓட்டப் போட்டியில் <u>முதலாவதாக</u> வந்தான்.

(a) இறுதியாக (b) மூன்றாவதாக

(c) இரண்டாவதாக (d) நான்காவதாக

14. அரிச்சந்திரன் <u>பொய்</u> சொல்ல மாட்டான்.

(a) நல்லவன் (b) தீமை

(c) உண்மை (d) திறமை

15. தை மாதத்தில் மிகவும் <u>வெப்பம்</u> நிலவுகின்றது.

(a) மழை (b) சூடு

(c) காற்று (d) குளிர்

**Read the paragraph below and answer the questions 16 to 20 from the information given.**

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**



பாரதியார் ஒரு புகழ் பெற்ற தமிழ்ப் புலவர். இவர் 1882ஆம் ஆண்டு மார்கழி மாதம் பதினோராம் திகதி தமிழ் நாட்டில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் சுப்பிரமணியன்.

பதினொரு வயதில் புலமை மிக்கவராக இருந்தபடியால் "பாரதி" என்று சொல்லப்பட்டார்.

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்துளோரெல்லாம் எதிர்த்து நின்றபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'

இது பாரதியார் கவிதை வரிகள்.

16. பாரதியார் யார்?

(a) ஆங்கிலப் புலவர் (b) தமிழ்ப் புலவர்
(c) ஓவியர் (d) வைத்தியர்

17. பாரதியார் எந்த மாதத்தில் பிறந்தார்?

(a) மார்கழி மாதம் (b) சித்திரை மாதம்
(c) மாசி மாதம் (d) ஆனி மாதம்

18. பாரதிக்கு பெற்றோர் வைத்த பெயர் என்ன?

(a) கண்ணன் (b) அமலன்
(c) சுப்பிரமணியன் (d) திருவள்ளுவர்

19. அச்சம் என்ற சொல்லின் பொருள் என்ன?

(a) கூச்சம் (b) கோபம்
(c) அழுகை (d) பயம்

20. பாரதி எங்கே பிறந்தார்?

(a) இலங்கையில் (b) அவுஸ்திரேலியாவில்
(c) கனடாவில் (d) தமிழ்நாட்டில்

**For questions 21 and 25, choose the correct word to complete the sentence.**

**21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொல்லைக் கொண்டு வசனத்தை பூர்த்தி செய்க.**

21. ராமன் மூன்றாம் ____________ படிக்கிறான்

(a) வகுப்பில் (b) வகுப்பை

(c) வகுப்பிற்கு (d) வகுப்பால்

22. குமரன் நூலகம் செல்ல____________ அனுமதி கேட்டுச்சென்றான்

(a) அம்மாவை (b) அம்மாவுக்கு

(c) அம்மாவிடம் (d) அம்மா

23. கண்ணகி தன் ___________ அணிந்த சிலம்பை கணவனிடம் கொடுத்தாள்

(a) காலோடு (b) காலால்

(c) காலில் (d) காலின்

24. காற்றுள்ளபோதே ___________.

(a) சுவாசித்துக்கொள் (b) முடித்துக்கொள்

(c) பட்டம் விட்டுக்கொள் (d) தூற்றிக்கொள்

25. எனக்கு ____________ இருந்ததால், நான் குளிர் பானத்தை அருந்தினேன்

(a) சோகமாக (b) தாகமாக

(c) கோபமாக (d) பசியாக

**For questions 26 and 30, choose the word that is spelt incorrectly in the given sentence.**

**26 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு, தரப்பட்ட வசனத்தில் எழுத்து பிழையான சொல்லைத் தெரிவு செய்க.**

26. கிளி பலத்தைக் கொத்தி தின்றது.

(a) கிளி (b) பலத்தை

(c) கொத்தி (d) தின்றது

27. பறவை மரத்தில் குடு கட்டியது.

(a) பறவை (b) மரத்தில்

(c) குடு (d) கட்டியது

28. என் தாத்தா வாழை இலை பரித்தார்.

(a) தாத்தா
(b) வாழை
(c) இலை
(d) பரித்தார்

29. சூரியன் நமக்கு ஒலி கொடுக்கும்.

(a) சூரியன்
(b) நமக்கு
(c) ஒலி
(d) கொடுக்கும்

30. அப்பா வேலை சேயும் போது காலில் அடிபட்டது.

(a) வேலை
(b) சேயும்
(c) போது
(d) காலில்



**Look at the picture above and answer the questions 31 – 33.**

**மேலே உள்ள படத்தை பார்த்து 31 முதல் 33 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

31. இது ஒரு ____________________ .

(a) பாடசாலை
(b) பூங்கா
(c) வீடு
(d) விளையாட்டு மைதானம்

32. இப்படத்தில் எத்தனை பிள்ளைகளை காணலாம்?

(a) இரண்டு
(b) ஏழு
(c) ஐந்து
(d) மூன்று

33. ஒரு சிறுமி என்ன படம் வரைகிறாள்?

(a) மரம்
(b) சூரியன்
(c) பூ
(d) பிள்ளைகள்

**For questions 34, choose the response that combines the sentence in the best way.**

34. கீழே தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

(1) மாலை நேரம் அனைவரும் வீடு திரும்பினார்கள்

(2) அங்கு பென்குவின்கள் கூட்டம் கூட்டமாக செல்வதை வாணியும் கண்ணனும் பார்த்தார்கள்

(3) வாணியும் கண்ணனும் மெல்பன் சென்றார்கள்

(4) இருவரும் எல்லாவற்றையும் பார்த்து முடித்தார்கள்

(5) பெரியப்பா அவர்களை பிலிப் தீவிற்கு அழைத்து சென்றார்

(a) (2), (3), (5), (1), (4)

(b) (3), (5), (2), (4), (1)

(c) (3), (2), (4), (1), (5)

(d) (1), (5), (2), (3), (4)

Write the meaning to the question 35.

35. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்". இதன் கருத்து?

(a) மனத்தில் எழுகின்ற எண்ணங்களின் பிரதிபலிப்பு முகத்தில் தெரியும்

(b) எல்லோருடைய முகமும் அழகானது

(c) அகம் என்றால் முகம்

(d) அகம் வடிவானது

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2018